# தனமல்வில பிரதேச சபை
# மொனராகலை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவம்பர் 19 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் தனமல்வில பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தனமல்வில பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) செவனகல உப அலுவலகத்தின் கட்டிடம் மற்றும் அதில் காணப்பட்ட அலுவலக உபகரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னாள் சபைச் செயலாளருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட விடுமுறை தினச் சம்பளமான ரூபா 98,626 தொகை அறவிடவேண்டிய பணமாக கணக்குகளுக்குக் கொண்வரப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,415,336 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,914 ஆக இருந்தது.

### 2.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையே 19% தொடக்கம் 100% வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையினால் செலவினக் கட்டுப்பாட்டின் போது பாதீடானது வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வாடகை | 4,146 | 4,115 | 1,356 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 960 | 607 | - |
| (iii) | ஏனைய வருமானம் | 811 | 256 | - |

#### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 8,513,667 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 91,050 |

### 2.3.3 சொத்து வாடகை

டங்டும வாராந்த சந்தை, மஹகம வாராந்த சந்தை, தனமல்வில வாராந்த சந்தை, மாட்டிறைச்சிக் கடை, கிரிஇப்பன்ஆர வாராந்த சந்தை, தனமல்வில மீன் கொட்டில் மற்றும் டங்டும மாட்டிறைச்சிக் கடை என்பவற்றை வாடகைக்கு விடப்பட்டிருந்த வாடகையாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய நிலுவை வாடகைப் பணம், தாமதக் கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்களான ரூபா 818,350 தொகையினை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(ஆ) பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.4 கடை வாடகை

நீண்ட காலத்திலிருந்து வாடகைப்பணம் செலுத்தாதிருந்த 25 கடைகளிலிருந்து 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த ரூபா 427,550 தொகையினை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.5 வாராந்த சந்தை வாடகை

தனமல்வில மற்றும் டங்டும வாராந்த சந்தைகளில் வாடகை அறவிடும் போது பெறுமதி சேர் வரியான ரூபா 252,743 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தன.

### 2.3.6 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

2005 ஆம் ஆண்டின் பின்னர் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2010 நவம்பர் மாதத்தின் போது சபையின் கப் வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 1,174,351 தொகை செலுத்தப்பட்டிருந்தன. 2011 மார்ச் 30 ஆந் திகதி ஊவா மாகாண எந்திரப்பொறியியலாளர்களின் பரிசோதனை

அறிக்கையின் பிரகாரம் பழுதுபார்க்கப்பட்ட இயந்திரத்தின் குறைபாடுகள் மீண்டும் ஏற்பட்டிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக வாகனத்தைப் பழுதுபார்த்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது தவிர ஏனைய முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டுள்ளன.

(அ) 2006 ஏப்ரல் 10, 2006 மே 26, 2006 ஆகஸ்ட் 01 மற்றும் 2007 ஆகஸ்ட் 01 ஆந் திகதிகளின் முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபங்களின் முறையே 28, 28(i), 28(ii) மற்றும் 36 ஆம் இலக்கங்களுக்கு முரணாகவும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19(1) (i) ஆம் பிரிவின் பிரகாரமும் உள்ளூராட்சி ஆனையாளரின் எழுத்துமூல முன் அங்கீகாரம் இன்றி 2011 ஆண்டின் போது 03 பதவிகளை உள்ளடக்கி 31 நியமனங்கள் வழங்கப்பட்டு ஊழியர்கள் சேர்க்கப்பட்டு 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சம்பளம், படிகள் மற்றும் ஊழியர் சேமலாபய நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் நிதியம் என்பவற்றின் பங்களிப்பாக ரூபா 4,919,926 தொகை செலுத்தப்பட்டிருந்தன

(ஆ) சபையின் கப் வாகனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையினை விஞ்சி ரூபா 20,434 தொகையான 257 லீற்றர் எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 (ஔ) மற்றும் (கா) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சரின் எழுத்துமூல முன்அங்கீகாரம் பெறப்படாமல் நலக்புரிச் செலவினமாக ரூபா 35,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தன.

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தனமல்வில பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதியை அபிவிருத்தி செய்வதற்காக மோட்டார் கிரேடர் வாடகையாக ரூபா 750,523 தொகை 2010 மே தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபார்சு மற்றும் வேலைப் பூர்த்தி அறிக்கை என்பன இன்றி செலுத்தப்பட்டிருந்தது. அப்போதிருந்த தலைவரினால் தனிபட்ட ரீதியில் மேற்பார்வை செய்யப்பட்டு இச் செயற்பர்டுகள் நிறைவேற்றப்பட்டிருந்தமை

காண்பிக்கப்பட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் அந்த சிபார்சு மற்றும் அறிக்கை வழங்குதல் நிராகரிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இந்தக் கொடுப்பனவுகளை அங்கீகரித்த மற்றும் உறுதிப்படுத்திய உத்தியோகத்தர்கள் இலங்கைக் குடியரசிக் நிதிப் பிரமாணம் 137, 138 மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 113 ஆவது பிரிவிற்கு முரணாக நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டன.

(ஆ) 2011 சனவரி தொடக்கம் ஒக்தோபர் 14 ஆந் திகதி வரை விநியோகிக்கப்பட்ட வீதி எல்லை மற்றும் கைமாறத்தகாத 57 சான்றிதழ்களில் ஒரு சான்றிதழ் மாத்திரம் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபார்சுடன் தலைவரினால் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் மற்றைய 56 சந்தர்ப்பங்களிலும் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபார்சு பெறப்படாமல் செயலாளரினால் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டி பின்பற்றப்படாது சபையினால் பல்வேறு செயற்பர்டுகளுக்காக ஈடுபடுத்தப்பட தனியார் வாகனங்களுக்காக ரூபா 57,750 தொகை வாகன வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(ஈ) பிரதேச சபை கட்டிட திட்டமிடல் குழு 2011 ஆம் ஆண்டின் போது கிரமமாக கூட்டங்களை நடத்தாதிருந்ததுடன் ஆண்டின் போது இரு தடவைகள் மாத்திரம் கூட்டம் நடைபெற்றிருந்தன. ஆண்டின் போது குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 15 விண்ணப்பங்களில் 03 இற்கு மாத்திரம் குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் குழுவின் சிபார்சு இன்றி 07 விண்ணப்பபடிவங்கள் தலைவரினால் தனிப்பட்ட ரீதியில் அங்கீகரிக்கப்பட்டு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

(உ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1(அ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படாமல் ரூபா 79,215 பெறுமதியான நிர்மாணப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஊ) சபையின் பதில் செயலாளராகக் கடமையாற்றிய அரசாங்க முகாமைத்துவ சேவையின் தரம் I உத்தியோகத்தருக்கு விடுமுறை தினச் சம்பளம் செலுத்தும் போது மாதாந்த சம்பளத்தில் $^1/_{30}$ இற்குப்பதிலாக $^1/_{20}$ படி கொடுப்பனவு செய்யப்பட்டமையினால் 2006 யூன் தொடக்கம் 2011 செப்தெம்பர் வரை மேலதிகமாக ரூபா 98,626 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(எ) தக்சினா அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டின் கீழ் நிறைவேற்றப்பட்ட செவனகல கெமுனுபுர சுற்றுவட்ட வீதியை புனரமைக்கும் வேலை தனமல்வில

பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டமைக்கான போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு ரூபா 564,686 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இந்தத் தவறு உரிய ஒப்பந்தகாரச் சங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டமையும் அவர்களினால் கணிப்பீடு செய்யப்பட்ட முறையில் பிழையாகப் பெறப்பட்ட ரூபா 399,499 தொகை சபை நிதியத்திற்கு 2011 யூலை 29 ஆந் திகதி மீளச் செலுத்தப்பட்டமையும் அறிக்கையிடப்பட்டிருந்தன. பிழையாக ஆவணங்களைத் தயாரித்தமை தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபை அதிகாரச் பிரதேசத்தில் வீதி அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட மோட்டார் கிறேடருக்கு 4107 லீற்றர் டீசல் கொள்வனவு செய்வதற்காக 2010 யூன் தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலத்தில் ரூபா 301,463 தொகை செலுத்தப்பட்டிருந்தன. எனினும் மோட்டார் கிறேடர் வழங்கிய நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களின் பிரகாரம் அவர்களினால் பெறப்பட்ட டீசல் 3515 லீற்றராக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 592 லீற்றர் டீசல்களுக்காக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணம் ரூபா 43,462 ஆகும்.

(ஐ) சபையினால் வீதி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட மோட்டார் கிறேடருக்கு வாடகை செலுத்துவதற்குப் பதிலாக 2010 ஆகஸ்ட் மாதம் 19 ஆந் திகதி 55 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 128,295 பெறுமதியான காசோலையொன்று தனியார் நிறுவனமொன்றின் பெயரில் எழுதப்பட்டிருந்தது. பின்னர் அந்தக் காசோலையில் உரியவரின் பெயர் அழிக்கப்பட்டு சபையுடன் தொடர்புடைய நபரொருவரின் பெயர் எழுதப்பட்டு தேவையான கையொப்பங்கள் இடப்பட்டு வங்கியிலிருந்து காசு பெறப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. போலியான நவடடிக்கைகள் தொடர்பாக முறையான பரிசோதனைகள் மேற்கொண்டு உரிய தரப்பினருக்கு எதிராக சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பூர்த்தி செய்த வேலை அறிக்கை மற்றும் உரிய பிரகாரம் செய்யப்பட்டமைக்கான தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபார்சு இன்றி டெக்ரர் டேலர் ஒன்றைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா 97,570 தொகை செுலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் கப் வாகனத்தின் அமையச் சாரதி கப் வாகனத்தை 2011 சனவரி 12 ஆந் திகதி மீளக் கையளிக்கும் போது வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த வானொலி இயந்திரம் காணப்படாதிருந்தமையை விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் அறிக்கையிட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித செயற்பாடுகளும் எடுக்கப்படாமல் சபை நிதியத்திலிருந்து ரூபா 4,080 பெறுமதியான வானொலி இயந்திரமொன்று புதிதாக கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்டிருந்தது.

(இ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடகாலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 977,031 ஆக இருந்தது.

(ஈ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் 141 ஆவது விதியின் ஏற்பாடுகளுக்கு முரணாக குறைநிரப்பு மதிப்பீடு அங்கீகரிக்கப்படாமல் பாதீட்டு ஏற்பாட்டினை விஞ்சி ரூபா 1,061,088 தொகை செலவிடப்பட்டிருந்தன.

(உ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் 203 ஆவது விதியின் பிரகாரம் சபையின் சொத்துக்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு மற்றும் 214 ஆம் விதியின் பிரகாரம் 2003 ஆம் ஆண்டின் பின்னர் களஞ்சியப் பொருட்கள் தொடர்பான மெய்மையாய்வு என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கில்லை.

(ஊ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் மற்றும் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,655,405 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சி அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 738,793 ஆக இருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்